# ஸன்மார்க்கப்ரதர்சினி

Vol. 3. MAY 1936. No. 9



மாதப் பதிப்பு

பத்ரிகாசிரியர் : சாஸ்திர ரத்னம் தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள்.
மதுரை (S. I.)

உ

# துளஸீ உபாக்யானம்

க்ருதயுகத்தில், ஸகல சிவபக்த சிகாமணிகளுள் ச்ரேஷ்டனாக வ்ருஷபத்வஜன் என்ற மஹாராஜா ஒருவனிருந்தான். அவனுடைய சிவபக்தியின் பராகாஷ்டையை என்னவென்று தான் சொல்வது! வீரசைவன் என்றால் அப்பெயர் அவனுக்கே தகும். ஸதாகாலமும் விபூதிதாரணமும், தேஹம் முழுமையும் ருத்ராக்ஷமயமாயும் அவனிடம் விளங்கிவந்தன. சிவலிங்கம்போல் செய்யப்பட்ட ருத்ராக்ஷ விக்ரஹம் அவன் சிரஸ்ஸிலேயே தரிக்கப்பட்டு வந்தது. சிவனை அதிதீவ்ர பக்தியுடன் பூஜை செய்யலானான். சிவத்யானத்திலும், பூஜையிலுமே அவன் நாட்கள் கடந்தன. சிவனைத்தவிர வேறொரு தைவமும் அவனுக்கு பூஜ்யமாகத் தோன்றவேயில்லை. தன் ப்ரஜைகளையும் தன்னை அநுஸரித்து நடக்கும்படியே ஆக்ஞாபித்தான். மீறி நடப்பவர்களை கொடூர தண்டனைக்குள்ளாக்கினான்.

சிவபக்தியிலும், பூஜையிலும் அதிகமாக ஈடுபட்ட, இவனிடம் மஹா கைலாஸத்திற்கதிபதியான பரமேச்வரன் அதிப்ரேமையையடைந்தார் என்பதில் ஆச்சர்யமென்ன! தனது ஸ்தானமாகிய மஹா கைலாஸத்தைக்கூட திரஸ்க்ரித்துவிட்டு, வ்ருஷபத்வஜனின் க்ரஹத்திற்கு, ஸாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரன், நிவேதனாதிகளை க்ரஹித்துக் கொள்வதற்காக, விஜயம் செய்தார். வ்ருஷபத்வஜனின் பக்தியோ, பகவானை நேரில் காணாமல் பூஜை செய்துகொண்டிருக்கும் பொழுது இருந்ததைக் காட்டிலும், பன்மடங்கு அதிகரித்துவிட்டன, பகவா

னும் அவனுடைய க்ரஹத்திலேயே தன் ஆஹாராதிகளை வைத்துக் கொண்டு வெகுகாலம் இருந்துவந்தார்.

நிற்க, வ்ருஷபத்வஜனுக்கு பரமேச்வரனிடம் எவ்வளவு அதிகமான பக்தியுண்டோ, அவ்வளவு அதிகமான த்வேஷம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் இருந்தது. "விஷ்ணு" என்ற நாமாவைக் கேட்டமாத்ரத்திலேயே 'சிவ சிவ' என்று, வீர வைஷ்ணவர்கள் 'சிவ' என்ற நாமத்தைக் கேட்டமாத்ரம் 'ஹரி' 'ஹரி' என்று சொல்வது போல், எச்சரித்துவந்தான். அவனுக்கு (ஊர்த்வபுண்ட்ர) நாமதாரணத்தை வஹித்த வைஷ்ணவர்களைக் கண்டதும் அடங்கமுடியாத கோபமும், வீராவேசமும் அதிவேகமாக வந்துவிடும். ஒரே ப்ரம்மம்தான்; சிவன், விஷ்ணு என்று வெளிக்குபாஸிக்கிறது என்ற உண்மையை அறியாதவன் போலும்! விளங்கினேன் :—

ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடம் இவனுக்கு இருந்த த்வேஷத்திற்காக இவனை தண்டிக்க எண்ணி, ஸ்ரீ ஸூர்ய பகவான் வ்ருஷபத்வஜனை தரித்ரனாக சபித்துவிட்டார். மேலும் அவன் வம்சமே அவ்விதம் தரித்ரத்தில் கஷ்டப்படும்படி சபித்தார். வ்ருஷபத்வஜனும் அன்று முதல் ஸர்வ கேவலமான தரித்ரனாகி, சாப்பாட்டிற்குக்கூட அவஸ்தைப் படும்படியாகி விட்டது. "சிவ பூஜையின் பயனோ இது" என்று கூட அவன் எண்ணினான். இவனே அன்னத்திற்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, தான் எவ்விதம் நிவேதனங்களை அவனிடம் எதிர்பார்ப்பது உசிதமாகுமென்று எண்ணி, ஸர்வேச்வரனான ஸ்ரீ பரமேச்வரன் அவனுடைய க்ரஹத்தினின்று அன்றே வெளியேறிவிட்டார். பரமேச்வரன் கூட அவ்விதம் நன்றி கெட்டவராக இருப்பார் என்று வ்ருஷபத்வஜன் ஸ்வப்நத்தில் கூட நினைக்கவில்லை. ஸாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரனைக் குறித்து கோபாவேசத்தில் சொல்லலானான் :



ஹே த்ரோஹி! இவ்விதம் நீ என்னை இந்த ஸமயம் கைவிடலாமா? நான் ஸம்பத்துடன் கூடி இருக்கும்பொழுது என்னிடம் சாப்பிட்டு வாஸம் செய்துவிட்டு, இப்பொழுது நான் ஏழ்மைத்தனத்தை யடைந்ததும் எனக்கு அநுக்ரஹித்து உதவி செய்யாமல் என்னை அதிக கஷ்டப்படும்படி விட்டுவிட்டு நீ பேசாமல் உன் ஊருக்குப் போக எண்ணிவிட்டாயே! உனக்கு நன்றி விச்வாஸம் கொஞ்சம் கூட கிடையாது போலிருக்கிறதே! இது ந்யாயமா? இது தர்மமா?" என்று பலவாறு பகவானை கோபித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டான்.

வ்ருஷபத்வஜனுக்கு, மஹாவிஷ்ணுவிடம் ஏற்பட்ட த்வேஷத்தால் ஸம்பாதிக்கப்பட்ட பாபமானது, தன்னிடம் அவன் செலுத்தி வந்த பக்தியால் ஸம்பாதிக்கப்பட்ட புண்யத்தை நாசம் செய்துவிட்டது" என்று பரமசிவன் எண்ணி அவனுக்கு உபகரிக்காமல் இருக்கலாமென்று எண்ணினார்! ஆனாலும் "தன்னை வெகு காலமாக பூஜித்து வந்த பக்தனை கைவிட்டார்" என்று அபவாதம் தனக்கு வாராமல் இருக்கும்பொருட்டு வ்ருஷபத்வஜனை ரக்ஷிக்கக் கடமைப்பட்டவரானார்,

பரமசிவனின் கோபத்தைக் கேட்கவும் வேண்டுமோ! தன் பக்தனை சபித்த அந்த ஸூர்யனை ஒரு நொடியில் தண்டனைக்குள்ளாக்க வேணுமென்று நினைத்தார். ஸாக்ஷாத் பரமேச்வரன் ஸூர்யனுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டனர்; எடுத்தார் கையில் தன் சூலாயுதத்தை; ஸூர்யனைப் பின்பற்றினார். ஒரே குத்தில் ஸூர்யனை மூர்ச்சையாக்க நினைத்தார், ஸூர்ய பகவானும் நடுங்கினார். ஒரு கதியும் அவருக்குத் தென்படவில்லை. இருந்தபோதிலும் தன் உயிரைக்காப்பாற்றும் பொருட்டு, ஒரே ஓட்டம் பிடித்தார். பரமசிவனும் சூலா

யுதத்தை முன் நீட்டிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்து அதிவேகமாக ஓடினார். பரமசிவன் தன்னை அணுகி, மூர்ச்சையாக்கிவிடுவார் என்ற நிச்சயம் வந்தவுடன் ஸூர்ய பகவான் ப்ரம்மாவிடம் ஓரே ஓட்டமாக ஓடி அவரை சரணாகதியடைந்து, தன்னை ரக்ஷிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

ப்ரம்மாவோ "இதேது, வழியில் போகும் சனியன் தன்னைப் பிடித்துவிடும் போலிருக்கிறது" என்றெண்ணி தன் அரண்மனைக் கதவுகளை ஒருவரும் உள்ளே வராமலிருக்கும் வண்ணம் நன்கு தாழ்ப்பாளிட்டுக் கொண்டார். ஸூர்யனா விட்டுவிடுபவர்! கதவுகள் உடைந்துபோகும்படி ஸூர்யபகவான் கதவை இடித்தார். ப்ரம்மாவும் அதிகமாக பயந்துகொண்டு, தனக்கு ஏதேனும் பரமசிவனிடமிருந்து ஆபத்து நேராமல் இருக்கவேண்டுமேயென்று, தானும் ஓட்டம் பிடித்தார். என்ன வேகம்! முதலில் ப்ரம்மா! இரண்டாவதாக ஸூர்யன்!! இருவர்களையும் துரத்திக்கொண்டு ஸாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரன்!!! ஸூர்யன் ப்ரம்மாவைத் துறத்துகிறார். சிவன் ஸூர்யனைத் துறத்துகிறார்!

இந்த அபாயத்தை நீக்க உபாயமறிந்தவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத்தவிர வேறு ஒருவரும் இல்லையென்றறிந்த ப்ரம்மா வைகுண்டத்திற்கு அதிவேகமாக ஓடி கதறிக்காண்டு, மஹாவிஷ்ணுவின் காலில் போய் விழுந்தார். பயத்தால் பேசமுடியாமல் வாய் தழைதழைத்தது. ஸூர்யனும் அவ்விதமே, அங்கு ஸ்ரீ விஷ்ணுவின் பாதாரவிந்தங்களிலேயே சரணமடைந்தார்.

நிற்க, தற்சமம் பரமேச்வரனுக்கு ஓட்டத்தில் கொஞ்சம் ச்ரம மேற்பட்டுவிட்டது. ச்ரமபரிஹாரத்திற்காக போகும் வழியில் ஓர் டத்தில் தங்கினார். "இவ்விருவர்களும் முதலில் போகட்டும், பின்



நாம் போவோம்" என்றெண்ணி இளைப்பாறினார். பரமசிவனுக்கும் தற்சமயம் விஷ்ணுவினிடம் சென்று இவ்விஷயங்களைச் சொல்ல கொஞ்சம் லஜ்ஜையாகவே இருந்தது. ஏனெனில் அவருக்கும், மஹாவிஷ்ணுவிற்கும் ஒருவிதமான கட்டுப்பாடு இருந்தது அதாவது:—

எவனொருவன் விஷ்ணுவை தூஷித்துக்கொண்டு பரமசிவனை மாத்ரம் பூஜை செய்கிறானோ அவனுக்கு பரமசிவன் ஒரு பலத்தையும் கொடுக்கக்கூடாது; அதேபோல் எவனொருவன் சிவனை தூஷித்துக்கொண்டு விஷ்ணுவை மாத்ரம் பூஜை செய்கிறானோ அவனுக்கு விஷ்ணு ஒரு பலத்தையும் கொடுக்கக்கூடாது'—என்பது.

எவ்விதமிருந்தும், தான் எடுத்த கார்யம் கைகூட வேண்டுமென்ற எண்ணத்துடன் வைகுண்டத்திற்குள் ப்ரவேசித்தார். மஹாவிஷ்ணுவும், ஸ்ரீ பரமேச்வரனை அர்க்யாதி உபசாரங்களினால் வரவேற்று ஒரு நல்ல ஆசனத்தில் அமரச்செய்தார். பின்பு விஷ்ணு பரமசிவனை வினவினார்:

"ஏது! என்ன விசேஷம்? ரொம்ப அவஸரமாக வந்திருக்கிறீர்களே!"

"ஏன், அதோ உட்கார்ந்து இருப்பவர்கள் சொல்லியிருப்பார்களே!" என்று ஒரு கர்ஜனை செய்தார் பரமேச்வரன்.

ப்ரம்மாவும் ஸூர்யனும் தற்பொழுது ஒருவரை ஒருவர் கோபத்துடன் விழித்துப் பார்த்துக்கொண்டனர்.

"ஸரி, எல்லாம் தெரிந்துகொண்டேன், தங்களுக்கு இப்பொழுது ஆகவேண்டியது என்ன? வீணில் ஸூர்யன்மேல் பிசகு சொல்வதில் ப்ரயோஜனமில்லை, அவனில்லாவிடில் லோகம் எப்படி நடக்கும்?" என்று மஹாவிஷ்ணு சிவனை சாந்தமாகக் கேட்டார்.

"எனக்கு வேண்டுவது வ்ருஷபத்வஜன் முன் இருந்தபடியே பெரிய தனவானாகும்படி செய்துவைக்கவேண்டுமென்பதே"—என்று அரைக்கோபத்தில் பரமசிவன் பதிலளித்தார்.

'அது இருக்கட்டும், தற்பொழுது பூலோகத்தில் வ்ருஷபத்வஜன் இருக்கிறானா; தங்களிடம் முன் இருந்த பக்தியை இப்பொழுதும் நடத்திவருகிறானா என்பதை அறியவேண்டாமா?" என்றார் மஹாவிஷ்ணுவானவர்.

X X X

ஸ்ரீபரமேச்வரன் ஸூர்யனை எதிர்க்கப் புறப்பட்டது முதல் மஹாவிஷ்ணுவை அடைந்து மேலே கண்ட ஸம்பாஷணை செய்தது வரை மூன்று யுகங்கள் சென்றுவிட்டன. அது சமயம், வ்ருஷபத்வஜன் பூலோகத்தில் இறந்து அவனுடைய குமாரன் ரதத்வஜனும் இறந்திருந்தான். ரதத்வஜனுக்கு இரு குமாரர்கள் இருந்தனர். தர்மத்வஜன், குஜத்வஜன் என்று பெயருள்ளவர்கள் அது ஸமயம் ஜீவித்து வந்தனர்.

X X X

பரமசிவன் "அதைப்பற்றி விசாரிக்கவேண்டிய தேவையில்லை. அவன் உயிருடன் இருந்தாலும் ஸரி. இல்லாவிட்டாலும் ஸரி. என்னை அவன் பூஜித்த பலத்தால் அவன் வம்சம் முன்னிருந்த ஸம்பத்துடன் கூடி ஸௌக்யமாய் வாழவேண்டுமென்பதையே நான் இச்சிக்கிறேன்" என்று த்ருடமாக பேசி முடித்தார்.

"ஆனால் அவனுடைய வம்சத்திற்கு லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்பட வேண்டுமென்று தாங்கள் இச்சிப்பது என்னால் செய்யக்கூடிய கார்யமல்ல. ஸர்வேச்வரீயான மஹா லக்ஷ்மியால்தான் அவ்விதம் செய்ய முடியும். அந்த ஸ்ரீதேவியை நாம் ப்ரார்த்திப்போம்" என்றார் விஷ்ணு.



லக்ஷ்மியும், "வ்ருஷபத்வஜனின் இரண்டாவது பேரனான குசத்வஜனுக்கு அவன் தர்மபத்னியான மாலாவதீ என்ற உத்தம ஸ்த்ரீயினிடத்தில் நானே நேரில் பெண்ணாய் அவதரித்து அளவிடக்கூடாத ஐச்வர்யத்தையும் கொடுத்துவிடுகிறேன்" என்று வாக்களித்தார்.

பின்பு, ப்ரம்மா, ஸூர்யன் இவர்கள் ஸர்வேச்வரனான பரமசிவனுடன் ஸமாதானமாகி அவரவர்கள் தம் தம் வேலையை மறுபடியும் பார்க்கலானார்கள்.

X X X

சிறிதுகாலத்தில் வ்ருஷபத்வஜனின் பேரனான குசத்வஜனுக்கு ஒரு பெண் பிறக்கலாயிற்று. பிறக்கப்போகும் பெண்ணோ ஸாதாரணமானதல்ல; வைகுண்டவாஸியான மஹாவிஷ்ணுவின் தர்மபத்னியான, ஸாக்ஷாத் ஸ்ரீ லக்ஷ்மீதேவியே! எல்லாக் குழந்தைகளைப் போலவும், கர்ப்பவாஸத்திலிருந்து வெளிவந்தும், அக்குழந்தை சப்தம் போட்டு அழவில்லை; ஆனால், நான்கு வேதங்களையும், உபநிஷத்துக்களையும், மந்த்ராதிகளையும் கோஷித்துக் கொண்டே பிறந்தது. ஸகலரும் ஆச்சர்யமடைந்தார்கள். அக்குழந்தைக்கு அதனாலேயே வேதவதீ எனப் பெயரிட்டனர். பிறந்த தினத்திலிருந்தே குசத்வஜனுக்கு ஐச்வர்யமும், ஸம்பத்தும் பெருக ஆரம்பித்தன. ஸர்வ ஸௌபாக்யத்தையும் அவனும் அடைந்தான். ஆனால் அக்குழந்தையை என்றும் தானே வளர்த்துவர, குசத்வஜன் பாக்யம்பெற்றிருந்தானா? இல்லை. அக்குழந்தை, "உங்களுக்கு இனி க்ஷேமமுண்டாகும், கவலை வேண்டியதில்லை,"—என்று ஆசீர்வதித்துவிட்டு, உடன் அவனுடைய க்ரஹத்தினின்று வெளியேறி வனாந்தரத்தில் கடுந்தவம்புரிய ஆரம்பித்துவிட்டது.

மஹாவிஷ்ணுவையே தான் பர்த்தாவாக அடையவேண்டுமென்று அதிதீவ்ரமான தபஸ் செய்தது அக் குழந்தையான பெண். அநேக யுகங்கள் கழிந்தன. ஆனால் அக்குழந்தை தபஸ்ஸை நிறுத்தவில்லை. ஒரே தீவ்ரமாகவேயிருந்தது. ஒருநாள் ஒரு அசரீரிவாக்கு அக்குழந்தையின் காதில் கேட்டது. அந்த அசரீரீ.

“உன் தபஸ் அளவிலடங்காதது. மஹாவிஷ்ணுவை அடைய எவ்வளவு தபஸ் வேண்டுமோ அதை உன் தபஸ் தாண்டிச்சென்றுவிட்டது. உன் தபஸ்ஸிற்கு அர்ஹமாக உனக்கு இந்த ஜன்மத்தில் ஒரு பலனையும் கொடுக்க ஸாத்யமில்லை. உன் அடுத்த ஜன்மத்தில் நீ அவச்யம் மஹாவிஷ்ணுவையே பாத்தாவாக அடைவாய்!” என்று கூறிற்று.

அதைக்கேட்டு அதிசந்தோஷத்துடன் தபஸ்செய்து வந்தாள் இவ்விதம் தபஸ்செய்து அதி தேஜஸ்ஸோடு கூடிய மின்னல்கொடி போல் அதிரூபலாவண்யவதியான உத்தம கந்யாரத்னமாக விளங்கி வந்தாள். இப்பேர்ப்பட்ட ஸ்த்ரீரத்னத்தைப்பார்த்து ஒரு தினம் லங்கேச்வரனான ராவணன் இச்சித்தான். அக்காலத்தில் இந்த தபஸ்வினீ பிக்ஷையளித்தாள். அவன் பிறகு அவளுடைய கையை தொட்டு இழுத்தான். உடனே அவள் கோபத்துடன் ஹுங்காரம் செய்து அவனை உதறிக்கீழே தள்ளிவிட்டாள். அவனுக்கு அப்போது ஒருநாளும் ஏற்படாத தேஹமுழுமையும் ஒரு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. மூர்ச்சையாகப் போய்விட்டான். அப்போதும் மனதில் மஹாலக்ஷ்மியை ஸ்மரித்தான். பராசக்தி அம்சமான இந்த வேதவதியே மந்த்ரோபதேசம் செய்தாள். அந்த ராவணனும் மூர்ச்சைவிட்டுச்சென்றான். பிறகு அந்த ஸ்த்ரீரத்னம் இந்த சரீரத்தை வைத்துக்கொள்ளக்கூடாது என்று எண்ணி உபயோகமில்



லாத அச் சரீரத்தைத் திரஸ்கரிக்க தீர்மானம் செய்து கங்காநதியில் வீழ்ந்து, அச் சரீரத்தைத் த்யாகம் செய்துவிட்டாள்.

x x x

இவ்விதமிருக்க மிதிலா நகரத்திற்கு அதிபதியான ஜநக மஹாராஜா யாக நிமித்தம் யக்ஞபூமியை உழும் பொழுது கலப்பையின் நுனி பாகத்தின் கீழ் ஒரு சிறிய பெண்குழந்தையோடு கூடிய ஒரு பெட்டியைக் கண்டெடுத்தார். அப்பெண் குழந்தை முன் சொன்ன, மஹாவிஷ்ணுவை பர்த்தாவாக அடையவேண்டுமென, தபஸ் செய்த கன்னிகையே கலப்பையின் நுனி பாகத்தின் கீழ் அகப்பட்டதால் அக்குழந்தைக்கு ‘ஸீதை’ யென நாமகரணம் செய்தார்கள். இந்த ஸீதை ராம, லக்ஷ்மணர்களுடன் வநவாஸம் செய்யும் பொழுது, ஸாக்ஷாத் அக்னிபகவானனவர் ஒரு ப்ராம்மண வேஷதாரியாக அவர்கள் இருக்கும் ஆச்ரமத்தையடைந்தார். லக்ஷ்மணன் ஆச்ரமத்தை பார்த்துக்கொண்டிருந்தான். அக்னி பகவான், ப்ராம்மண வேஷத்துடன், ஸ்ரீ ராமனை ரஹஸ்யமாக ஒருபக்கம் அழைத்து கீழேகூறியவாறு லக்ஷ்மணன்முதலாக ஒருவருக்கும் தெரியாமல், சொல்லலானார்.

“ஏ ராமா! உனக்குத் தெரியாததொன்றுமில்லை. இருந்தாலும் நான் ஒரு முக்யமான ஸமாசாரம் சொல்லவிரும்புகிறேன். அதாவது இந்த ஸீதை முன்னொரு ஜன்மத்தில் ஒரு கன்னிகையாக வநத்தில் இருக்கும் பொழுது, ராவணன் அவளிடம் இச்சைகொண்டான். அப்பொழுது ஸீதை தன் பாதிவ்ருத்யத்தால் அவனை உடன் மூர்ச்சையாக்கினாள். இருந்தாலும் அவனுக்கு ஞாபகசக்திமட்டும் இருந்தது. அந்த ஸ்த்ரீயைக்குறித்து எங்கும் இவ்விதம் ஒரு பெண்ணால் தான் ஜெயிக்கப்படவில்லை யாதலால் இவள் ஸாமான்யமன்று என்று

எண்ணி தான் செய்த அபராதத்தை க்ஷமிக்கும்படி, வேண்டினான் அப்பொழுது அவளும் அந்த பாபநிவாரணத்திற்கு ஒருமந்த்ரத்தையும் அவனுக்கு உபதேசித்து, அவன் செய்த அக்ரமச்செய்கைக்குத் தண்டனையாக, “உனக்கு சாவு என்னால்தான் ஏற்படும்” என்றும் சபித்துவிட்டாள். அந்த ராவணனும் தப்பித்து தம்பிரான் புண்ணியமென்று அவ்விடமிருந்து மூர்ச்சையிலிருந்து அவளநுக்ரஹத்தால் எழுந்து விலகினான். ஆகையால் அதே பெண்ணான ஸீதை தற்பொழுதும் இங்கிருந்தால் ராவணன் முன்போலவே அவள் பாதிவ்ரத்யத்தால் மூர்ச்சித்து, உபதேசமும் திரும்பப்பெற்று, உயிருடனேயே போய்விடுவான் பிறகு உன் அவதார உத்தேசமாக அவனுடைய இறப்பிற்குக் காரணம் ஏற்படாமல் போய்விடும். ஆகையால் நான் அந்த நிஜ ஸீதா ஸ்வரூபத்தை என்னுடன் வைத்துக்கொண்டு; ஒரு சாயா ஸீதையை ஸ்ருஷ்டித்து வைத்துவிடுகிறேன். அந்த சாயா (நிழல்) ஸீதைக்கு நிஜ ஸீதைக்குள்ள மஹத்வம் வர ந்யாயமில்லை. அதுவே ஸரியான தந்த்ரம். உன் அவதார காரணமும் நிறைவேறும். நானும் என் சொந்த தேஜஸ்ஸுடன் ஸீதையினுடைய ஸமீபத்தில் இருந்துகொண்டு பன்மடங்கு ப்ரகாசிப்பேன்” என்று ராமனிடம் கூறி, நிஜ ஸீதையை தன்னுடன் அழைத்துக் கொண்டு, ஒரு சாயா ஸீதையை ஸ்ருஷ்டித்து அங்கு ஆச்ரமத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டார். அக்னி, ராமர், ஸீதை இம்மூவர்களுக்கும் மட்டுமே இந்த ரஹஸ்யம் தெரியும்.

சாயா ஸீதையானதால்தான் ராவணனால் இலங்கைக்கு புஷ்பக விமானத்தல் ஸுலபமாகத் தூக்கிக்கொண்டு போகப்பட்டாள். அங்கே ராவணவதம், ஸ்ரீ ராமனால் ஏற்பட்டபிறகு இந்த சாயா ஸீதை தனக்கு ஒரு வழிகாட்டவேண்டுமென்றும், தான் ஸ்ருஷ்டிக்



கப்பட்ட கார்யம் முடிந்துவிட்டது என்றும், இனி தான் என்ன செய்யவேண்டும் என்று தெரியாமல் தவித்தாள். தனக்கே புருஷனில்லாமல் தனிமையாக இருக்க நேரிட்டதைப்பற்றி கவலையுற்றாள். இவ்விதம் தனக்கு ஒரு போக்குமில்லாத அந்தச் சாயாஸீதை ஒரு வனத்திற்குச் சென்று ப்ரம்மாவைக் குறித்து கடுந்தவம் புரிந்தாள், அந்த தவம் ரொம்ப காலம் நீடித்தது. அவள் தனது தவத்தில் ப்ரதிதினமும் “நான் பர்த்தாவை அடையவேண்டுமென்று எண்ணி எனக்குப் பதியைக்கொடு” என்று 5 தரம் திருப்பித்திருப்பி அதே வாக்யத்தை உச்சரித்துக் கொண்டிருந்தாள். இதை கவனித்த ப்ரம்மாவும், “ஸரி இப்பெண்மணி 5 பர்த்தாக்களை இச்சிக்கிறாள் போலிருக்கிறது” என்றெண்ணி, பஞ்சபாண்டவர்களை அவளுக்கு பர்த்தாக்களாவார்கள் என்று அநுக்ரஹம் செய்தார். அவ்விதமே த்வாபர யுகத்தில் த்ரௌபதையாக அந்த சாயா ஸீதையைச் ஸ்ருஷ்டித்து, தர்மபுத்ரர், பீமஸேநன், அர்ஜுனன், நகுலன், ஸஹாதேவன் என்ற 5 பெயர்களுக்கும் மனைவியாக ஏற்படுத்தினார்.

(தொடரும்)

1995/14

உ

# ஸாவித்ரீதேவியின் உபாக்யானம்

புண்ய பூமியான இந்த தென்னிந்தியாவில் தக்ஷிண கோசல தேசத்தில் அச்வபதி யென்று பெயர்கொண்ட ஓர் அரசன் ரொம்பவும் ப்ரஸித்தனாக விளங்கிவந்தான். அந்த ராஜனும் வேத சாஸ்திரங்களிலும் நீதியிலும் அனுஷ்டானத்திலும் நிகரற்றவனாக இருந்துவந்த காரணத்தால் பகவானுடைய ப்ரஸாதத்திற்கு முக்யமான பாத்ரமாக விளங்கிவந்தான். அந்த அரசனுக்கு மாலதி என்று தர்மபத்னியும் பாதிவ்ர்த்தியத்தை ரக்ஷித்துக்கொண்டும் க்ருஹ க்ருத்தியத்தில் வெகு ஸமர்த்தியாக இருந்தாள். தனது பதியான ராஜனுக்கு பணிவிடை செய்வதில் அவளுக்கு ஸமானமாக மற்றொரு ஸ்திரீயை உலகத்திலே சொல்லமுடியாது. இவ்விதம் எல்லா விதத்தில் மேன்மை தங்கிய அந்த திவ்ய தம்பதிகளுக்கு வம்சாபிவிர்த்திக்கு ஹேதுவான ஸந்ததி இல்லாமலிருந்தது. அநேக விதமான ப்ராயச்சித்தாதிகளைச் செய்தும் ஸந்ததி ஏற்படாத காரணத்தை முன்னிட்டு அந்த இருவர்களும் ரொம்பவும் கவலையுள்ளவர்களாக இருந்துகொண்டு காலத்தைக்கழித்து வரும் ஸந்தர்ப்பத்தில் ஒரு தினத்தில் எதிர்ச்சையாக பராசரர் மஹர்ஷியானவர் அந்த அரசனுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

अव्याक्षेपः भविष्यन्त्याः ।
कार्यसिद्देस्तु सूचिका ॥
அவ்யாக்ஷேப: பவிஷ்யந்த்யா: ।
கார்யஸித்தேஸ்து ஸூசிகா ॥



அவ்யாக்ஷேப : பவிஷ்யந்த்யா :
கார்யஸித்தேஸ்து ஸூசிகா :

என்ற சாஸ்திர ப்ரகாரம் ஒரு கார்யத்தை ஆலோசித்துக்கொண்டு இருக்கும்போது மஹான்களுடைய ஆகமனம் ஏற்பட்டால் அந்த ஆகமனமானது கார்யஸித்தியை நிச்சியமாக செய்கிறபடியால் இதை அறிந்த அந்த அச்வபதி யென்ற மஹாராஜனும் பரம சந்தோஷத்துடன் பாராசரர் மஹர்ஷியை வரவேற்று அர்க்கியாதி பாத்ராதிகளால் பூஜித்து ரொம்பவும் வெகுமானத்துடன் ஆராதித்தான். அந்த மஹர்ஷியோ அந்த ராஜனுடைய சிந்தனையை அறிந்து 'ஸாவித்ரியை நீ உபாஸித்து வந்தால் உன்னுடைய மனோரதம் பூர்த்தியடையு' மென்று சொல்லிவிட்டு ஸாவித்ரீ காயத்ரீ யென்று சொல்லப்படும் மகா மந்த்ரத்தின் ஜெப மகிமையைப்பற்றி ரொம்பவும் விஸ்தாரமாக எடுத்துரைத்தார்.

ஒரு ஆவர்த்தி காயத்ரீ மந்த்ரத்தை ஜெபம்பண்ணினால் அன்று பகலில் செய்த ஸகல பாபமும் போய்விடுமென்றும் 10 ஆவர்த்தி காயத்ரீஜெபம் பண்ணினால் அன்று பகல் ராத்ரி இரண்டிலும் செய்த பாபம் போய்விடுமென்றும் 100 ஆவர்த்தி ஜெபம் பண்ணினால் ஒரு மாஸத்தில் செய்த சகல பாபங்களும் போய்விடுமென்றும் 1000 ஆவர்த்தி ஜெபம் செய்தால் ஒரு வருஷத்தில் செய்த ஸகல பாபங்களும் போய்விடுமென்றும் லக்ஷம் ஆவர்த்தி ஜெபம் பண்ணினால் ஒரு ஜென்மாவிலேயே செய்த பாபம் போய்விடுமென்றும் 10 லக்ஷம் செய்தால் ஜன்மாந்தரங்களில் செய்த பாபங்கள் போய்விடுமென்றும் ஒரு கோடி ஜெபம் பண்ணினால் பரமேச்வரனுக்கு ஸமான வைபவமுள்ளவனாக ஆகிறானென்றும் 10 கோடி ஜெபம் பண்ணினால் பரமேச்வரனாகவே ஆகிவிடுகிறானென்றும் பஹுப்ரகாரமாக காயத்ரீ

ஜெபத்தின் மஹிமையைப்பற்றி உபன்யஸித்துவிட்டு காயத்ரீயினுடைய ப்ரஸாதத்தால் வம்ச அபிவிர்த்திக்கு ஹேதுவான திவ்ய ஸந்ததியும் உண்டாகுமென்றும் உபன்யாஸித்தார். இவ்விதம் ராஜனுக்கு உபதேசித்துவிட்டு பராசரமுனியும் தனது ஆச்ரமம் சென்றார். ராஜனும் மஹர்ஷியின் உபதேசத்தை சிரஸால் வஹித்துக்கொண்டு புஷ்கர க்ஷேத்ரத்தில் காயத்ரி மஹா மந்தரத்தை புரச்சரணை செய்துவந்தான். 10 லக்ஷம் ஜெபம் ஆனவுடன் காயத்ரி தேவியே ப்ரத்யக்ஷமாக ராஜனுக்கு தர்சனம் கொடுத்து 'உன்னுடைய தபஸால் நான் ரொம்பவும் ஸந்தோஷத்தை அடைந்தேன். என்னுடைய அம்சமானது உனக்குப் பெண்ணாகப் பிறக்கும். அந்த கன்னிகை மூலமாக உன்னுடைய வம்சாபிவிர்த்திக்கு ஹேதுவான ஸந்ததிகளும் விர்த்தியாகு'மென்று சொல்லிவிட்டு தேவியானவள் அந்தர்த்தியானத்தை அடைந்தாள்.

ராஜனும் அம்பிகையினுடைய அனுக்ரஹத்தை அடைந்து பரம சந்தோஷத்துடன் மாலதியென்று தனது மனைவியுடன் தனது கிருஹத்திற்கு வந்து வரதஸமாப்தியும் செய்து பிராம்மணோத்தமர்களுடைய ஆசீர்வாதத்தையும் அடைந்தான். இவ்விதம் இருக்கும் பொழுது காலக்ரமமாக மாலதியினுடைய கர்ப்பத்தில் காயத்ரீ தேவியே ப்ரவேசித்து கன்னிகையாக ஆவிர்ப்பவித்தாள். பிறந்த மாத்திரத்திலேயே ஸாக்ஷாத் பரதேவதையே தான் கன்னிகையாக அவதரித்திருக்கிறாள் என்றதை சகல ஜனங்களும் அறியும்படி ஸகல வேதங்களையும் அதிலுள்ள மஹா வாக்யங்களையும் மந்த்ரமாலைகளையும் உச்சரித்துக்கொண்டு அந்த கன்னிகையானது அட்டகாஸம் செய்தது. அச்பதி மகாராஜனும் அவன் மனைவியான மாலதியென்ற உத்தம ஸ்திரீயும் அந்த உத்தம கன்னிகையின் ஸந்தரிசனத்தால்



பரமானந்த பரிதர்களானார்கள். அந்த கன்னிகையும் நாளுக்குநாள் சுக்லபக்ஷ சந்திரன்போல் வளர்ந்துகொண்டு அளவற்ற சௌந்தர்யம் சௌகுமார்யம், லாவண்யம் இவைகளோடு கூடினதாகவும் இருந்து வந்தது. அந்த சந்தர்ப்பத்தில் த்யுமத்ஸேனன் என்ற ஒரு அரசன் ஸாமந்த ராஜாக்களால் தனது ராஜ்யத்தைவிட்டு விரட்டப்பட்டு அவர்களோடு போர்செய்து ஜெயிக்க அசக்தனாக இருந்த காரணத்தால் அரண்யத்திற்கு வந்து வசித்துவந்தான். அவனுக்கு ஸத்யவானென்று ஒரு குமாரன் உண்டு. அந்த குமாரனோ மன்மதனைத் தோற்கடிக்கக் கூடின அழகோடு கூடினன். முன்சொன்ன அச்வபதி மகாராஜனுடைய கன்னிகையாகவும் ஸாவித்ரியினுடைய பிரஸாதத்தால் உண்டான காரணத்தைக்கொண்டு ஸாவித்ரியென்று பெயரோடு கூடினவரையுள்ள ராஜகுமாரியானவள் ஒரு தினம் சாயங்காலத்தில் தனது சகிகளோடு கூட உத்யான வனத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது த்யுமத்ஸேனனுடைய பிள்ளையான ஸத்யவானைக் காணும்படி நேர்ந்தது. அந்த ராஜகுமாரனைக் கண்ட மாத்திரத்தில் ராஜகுமாரியான ஸாவித்ரியின் மனம் அந்த ஸத்யவானிடத்திலேயே ஈடுபட்டு அவனையே தனக்கு பர்த்தாவாகச் செய்துகொள்ள விரும்பினாள். ஸத்யவானும் ஸாவித்ரியென்ற ராஜகுமாரியினுடைய சௌந்தர்யமாகிற வலையில் அகப்பட்டுக்கொண்டு அந்த ஸாவித்ரியையே மனைவியாக அடையவேண்டுமென்று விரும்பினான். ப்ரஸ்பரம் இருவர்களுடைய மனமும் ஒற்றுமையாக இருந்ததை அச்வபதியென்ற ராஜனும் அறிந்து தன் பெண்ணினுடைய இஷ்டப்படியே த்யுமத்ஸேனனுடைய பிள்ளையான ஸத்யவானுக்கு தன் பெண்ணான ஸாவித்ரியை பாணிக்ரஹணம் செய்துகொடுத்தான். பரிணய மங்களம் ஆன உடன் ஸாவித்ரி ஸத்யவான் என்ற தனது [illegible]ாவோடுகூட த்யுமத்ஸேனனென்ற தனது மாமனாருடைய

ஆச்ரமத்திற்கே சென்றுவிட்டாள். த்யுமத்ஸேனனோ ராஜரிஷியாகி அகஸ்தியருடைய உபதேசத்தால் புவனேஸ்வரியின் மஹாமந்த்ரத்தை அறிந்துகொண்டு மந்த்ரஸித்தி பண்ணிவந்தார். அந்தத் தருணத்தில் சத்தியவானும் தனது தகப்பனார் தபோநிஷ்டராய் இருப்பதனால் தகப்பனாருக்கு பரிச்சரியை செய்துகொண்டு பல மூலாதிகளையும் ஆங்காங்கு அரண்யத்தில் சென்று சம்பாதித்து கொடுத்துவருவான். அதற்கு ஸாவித்ரியும் தனது பர்த்தாவான ஸத்யவானுக்கு அனுகூலகளத்ரமாக இருந்துகொண்டு மாமனாருடைய பரிச்சரியையில் ஈடுபட்டு வந்தாள்.

இவ்விதம் இருக்கும்பொழுது ஸத்யவான் என்ற ரிஷிகுமாரன் தனது தகப்பனாரான மகரிஷிக்கு கந்தமூலங்களைக்கொண்டு வருவதற்காக ஸமீபத்திலுள்ள அரண்யத்திற்குச் சென்று அங்கு ஒரு அழகான மாமரத்தைக் கண்டான். அந்த மரத்திலோ யானையினுடைய தலைக்கு சமானமான பெரிய பெரிய பழங்கள் ரஸத்தால் நிரப்பப்பட்டுத் தொங்கிக்கொண்டு விளங்கிவந்தன. அந்தப் பழங்களைப்பறித்து தனது தந்தைக்குக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸத்யவான் அந்த மரத்தில் ஏறினான். ஒரு உயர்ந்த கிளையில் ஏறிக்கொண்டு கனிகளை எட்டிப்பறிக்கும்பொழுது திடீரென்று கால் தவறி கீழே விழுந்துவிட்டான். உடனே அவன் உயிரும் போய்விட்டன. அந்த சந்தர்ப்பத்தில் ஸாவித்ரியும் பர்த்தாவினுடன் கூட சென்று போயிருந்தபடியால் பர்த்தாவுக்கு இவ்விதமான நிலை ஏற்பட்டிருக்கிறதை உத்தேசித்து ரொம்பவும் வருந்தினாள். உடன் தர்மராஜன் நேரிலேயே தான் வந்து அந்த ஸத்யவானுடைய ஜீவனை பாசக்கயிற்றால் கட்டி இழுத்துக்கொண்டு தன்னுடைய லோகம் போக யத்தனித்தான். ஸாவித்ரியோ மகா



பதிவ்ரதாசிரோமணியானதினால் தனது பர்த்தாவை அபகரித்துக் கொண்டு போகும் யமனை ப்ரத்யக்ஷமாகவே பார்த்துத் தானும் கூடவே சென்றாள். லோகத்தில் பிராணிகள் கேவல பாபத்தை மாத்திரம் செய்துகொண்டிருப்பவர்கள் ஒரு வகையாகவும், புண்யம் பாபம் இரண்டையும் செய்துகொண்டிருப்பவர்கள் வேறொரு விதமான மற்றொரு வகையாகவும் புண்யத்தை மாத்திரம் செய்துகொண்டு இருப்பவர்கள் வேறொரு விதமான வகையாகவுமாக மூன்று பிரகாரமாகப் பிரிக்கப்படுகிறார்கள். அதில் கேவலம் பாபிகளிடம் அவர்களுடைய பிராணனை அபகரிக்க தான் நேரில் போகிறதில்லை. தன்னுடைய படர்களையும் அனுப்புகிறதில்லை. கேவலம் பாபிகளுடைய ஜீவன் தானாக தர்மராஜாவின் 'சன்னிதியில் சென்று தனது பாபங்களையும் முறையிட்டுக்கொண்டு தர்மராஜனை சரணமடைகின்றது. புண்யம், பாபம் இரண்டும் சமானமாயுள்ள ஜீவனை தனது லோகம் கொண்டுபோக தர்மராஜன் தனது படாக்களை அனுப்புகிறான். பரம புண்யவான்களுடைய ஜீவனைக்கொண்டுபோகவோ தனது படாக்களுக்கு சாமர்த்தியம் போராது என்று நினைத்து தர்மராஜன் ஸ்வயமாகவே வருகிறான். ஸத்யவானுடைய புண்யத்தின் பெருமையோ ஸாவித்ரியினுடைய பாதிவிரத்தியத்தினுடைய பெருமையோ அளவிடமுடியாததினால் அந்த ஸத்யவானுடைய ஜீவனை கொண்டுபோவதற்கு தர்மராஜன் ஸ்வயமாக வந்து சேர்ந்தான். அவ்விதம் வந்து ஸத்யவானுடைய ஜீவனை பாசக்கயிற்றால் கட்டி தர்மராஜன் இழுத்துக்கொண்டு போகும்பொழுது ஸாவித்ரியும் தனக்கு பர்த்ருவியோகம் கூடாதென்று நினைத்து பின்தொடர்ந்து சென்றாள்.

अथस्सत्यवतः कायात् पाशबद्धं वशंगतं ।
अङ्गुष्ठमात्रं पुरुषं निश्चकर्षयमोबलात् ॥

𑌅𑌥 𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑌃 𑌕𑌾𑌯𑌾𑌤𑍍𑌪𑌾𑌶𑌬𑌦𑍍𑌧𑌂 𑌵𑌶𑌂 𑌗𑌤𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌕𑌰𑍍𑌷 𑌯𑌮𑍋 𑌬𑌲𑌾𑌤𑍍 ॥

அத: ஸத்யவத: காயாத்பாசபத்தம் வசம் கதம் |
அங்குஷ்டமாத்ரம் புருஷம் நிச்சகர்ஷயமோ பலாத் ||

என்ற மகாபாரத வசனத்தாலேயே ஸத்யவானுடைய ஜீவனை தர்மராஜன் பாசக்கயிற்றால் கட்டி இழுத்துக்கொண்டு போனது பிரஸித்தமானது. அவ்விதம் தர்மராஜன் ஸத்யவானுடைய ஜீவனை இழுத்துக்கொண்டு போகும்பொழுது வெகுதூரம் வரையிலும் ஸாவித்ரியும் பின் தொடர்ந்தே போனாள். தர்மராஜனும் கொஞ்சதூரம் போன பிற்பாடு திருப்பிப்பார்த்தான். ஸாவித்ரியோ பின்னோடே வருகிறாள். என்று ஆச்சரியத்தையடைந்து "அம்மணி! நீ எதற்காக பின்னோடு வருகிறாய். உன் பர்த்தாவினுடைய ஜீவனை கொண்டு போவது என் குற்றமல்ல. உன் பர்த்தாவுக்கு இந்த கர்மபூமியில் கர்ம பலத்தை அனுபவிக்க வேண்டிய காலம் முடிந்துவிட்டது. அதற்காக நீ விசனப்படுவதில் பயனேயில்லை. நீ எதற்காக பின்தொடர்ந்து வருகிறாய். இந்த மனுஷ்ய சரீரத்துடன் என்னுடைய லோகத்திற்கு வரமுடியாது" என்று தர்மராஜன் ஸாவித்ரியைப் பார்த்துச்சொன்னான். அதைக்கேட்ட ஸாவித்ரியோ 'தர்மராஜனே! தாங்கள் சொல்லுவதெல்லாம் உண்மைதான். ஆகிலும் எனக்கு பர்த்ருவியோகத்தை சகிக்கமுடியாது. என் பர்த்தாவை எதில் கொண்டுவைக்கிறதாக உத்தேசமோ அந்த இடத்தில் நானும் வந்து இருக்கிறேன். மனுஷ்ய சரீரத்தோடு தங்கள் லோகம் வரக்கூடாது என்று சொல்வது ஞாயமில்லை எவ்வளவோ மகான்கள் ஸரீரத்தோடு ஸ்வர்க்கலோகத்துக்கும் பிர்மலோகத்துக்கும் சென்றிருப்பதாக திவ்ய சரித்திரம் மூலமாகத்தெரிகிறது. அதனால் நான்



ஏன் வரக்கூடாது. என்னை தாங்கள் வரக்கூடாது என்று தடுப்பது தருமஞாயமில்லை. தங்களிடத்தில் எனக்குள்ள பக்தி விசேஷத்தை தாங்களே அறிவீர்கள். தனது கிருஹத்தில் ஒரு அதிதிவந்தால் அவனை ஸத்கரித்து அவன் மனோரதத்தை பூர்த்தி செய்யவேண்டும் என்ற தர்ம ரகஸியத்தை தாங்கள்தான் நசிகேதஸ்ஸுனுடைய விஷயத்தில் அனுஷ்டானம் பண்ணிக்காட்டி லோகத்தில் பிரசுரம் செய்திருக்கிறீர்கள் அதுவிஷயத்தில் தங்களுக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றுமேயில்லை.

அதிதி ஸத்காரத்துக்கு மேலான விசேஷ தர்மமோ மற்றொன்று இருக்கிறதென்று சொல்லமுடியாது. தாங்கள் பரம அதிதியாக எனது ஆசிரமத்துக்கு வந்தீர்கள். தங்களுடைய மனோரதமோ எனது நாயகனுடைய பிராணனை அபகரித்துக்கொண்டு போவதே தான் ஆகும். நான் அதை அறிந்து தங்களைப்போலொத்த மேலான அதிதி கிடைப்பது துர்லபமென்று நினைத்து என் உயிருக்கும் மேலான என் நாயகனுடைய உயிரை தங்களுக்கு வெகுமான திரவ்யமாகக் கொடுத்து ஸத்கரித்தேனல்லவா? அவ்விதம் செய்த என்னுடைய உத்தமமான அதிதி ஸத்காரத்தை தாங்கள் மகிழ்ந்துகொண்டு எனக்கு ஆசீர்வாதம் செய்ய கடமைப்பட்டவரல்லவா. லோகத்தில் ஸத்பாத்ரத்தில் ஒரு பிரியமான திரவியத்தைக் கொடுப்பது என்ற ஔதாரியமாகிய குணத்தை எல்லாரும் அடைவது அரிதாகும். அப்படி எங்கேயாவது சில புண்யவான்களிடத்தில் அந்த ஔதாரியமென்ற குணம் இருந்தாலும் தனத்தைக் கொடுப்பார்கள். பூமியைக் கொடுப்பார்கள். கிருஹத்தைக் கொடுப்பார்கள். அன்னியில் தனது உயிரைக் கொடுத்து ஒருவரும் ஔதாரியத்தைப் பிரகாசப்படுத்தமாட்டார்கள்.

என்னைப்போலொத்த பதிவ்ரதா ஸ்திரீகளுக்கோ தனது உயிருக்கும் மேலானது பர்த்தாவினுடையபிராணனாகும். அதைக்கூட நான் அதிதியான தங்களுக்குக் கொடுப்பதில் என்னுடைய பாதிவ்ரத்திய மகிமையினால் தடை செய்யாமல் உத்ஸாகத்துடன் கொடுத்து எனது பரம ஒளதாரியத்தைப் பிரகாசப் படுத்தினேனே அதைத் தாங்களெல்லவா கவனித்து ஆனந்திக்கவேண்டும். தங்களுக்குத்தானே தர்மராஜனென்ற பெயர் உலகத்தில் விளங்கிவருகிறது. தர்மங்களெல்லாம் மூர்த்திகரித்துக்கொண்டு தங்களுக்குள திரில்நர்த்தனம்செய்கின்றதுகள் என்றதை பெரியோர்கள் மூலமாகவும் நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். அப்படியிருக்கிறபொழுது பரம ஒளதாரியமாகிய என் தர்மத்தைத் தாங்கள் அறிந்து எனக்கு ஆசீர்வாதம் பண்ணாமல் இருப்பதோடுங் கூட என் பர்த்தாவின் பின்னோடுகூட நான் வரக்கூடாதென்றும் தாங்கள் தடுக்கிறீர்கள். அது ஞாயமாகுமா? என்னால் பரத்ருவியோகத்தைச் சகிக்கமுடியாது. ஸ்வர்க்கமோ, நரகமோ, என் பர்த்தா எந்தயிடத்தில் இருப்பாரோ அங்கேதான் நானும் இருப்பேனென்றதை அறியவும். ஒரு புருஷனுடைய நிழலானது அந்தப் புருஷனைவிட்டுப் பிரியாததுபோல் என் பர்த்தாவை விட்டு நான் பிரியமாட்டேன் என்று பரமகாம்பீர்யத்தோடு ஸாவித்ரியானவள் தர்ம ரகஸ்யத்தை எடுத்து உரைத்தாள்.

அதைக்கேட்ட தர்மராஜனும் பரமசந்தோஷத்தை அடைந்து ஸாவித்ரியினுடைய ஒளதாரியமோ ரொம்பவும் மேலானதாக இருந்து வருகிறது. பர்த்தாவினுடைய பிராணனைக்கூட அதிதியாகிற எனக்குக்கொடுத்து ஸத்கரித்தாளல்லவா! அவளுடைய ஒளதாரியத்திற்கும் மேலான நம்மிடத்தில் ஒரு ஒளதாரியமிருக்கிறது என்பதை நாம் எப்படி வெளிப்படுத்துகிறது

195514

(தொடரும்)